Let the mind manage the body
Que l'esprit gère le corps

**TAMIL**
**(Subject code No. P170)**

Index Number: ..........................................................................................................................................

# MAURITIUS EXAMINATIONS SYNDICATE

## Primary School Achievement Certificate Assessment
## 2023

**Time: 1 hour 45 minutes** **Total Marks: 100**

**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Check that this assessment booklet contains **9** questions printed on **16** pages.
2. Write your Index Number on the assessment booklet in the space provided above
3. You should not use red, green or black ink in answering questions.
4. Write all your answers clearly in the assessment booklet.
5. Attempt **all** questions.

| Question | Marking | | | Revision | | | Control | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Marks | | Sig | Marks | | Sig | Marks | | Sig |
| 1A | | | | | | | | | |
| 1B | | | | | | | | | |
| 2A | | | | | | | | | |
| 2B | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| 4A | | | | | | | | | |
| 4B | | | | | | | | | |
| 5A | | | | | | | | | |
| 5B | | | | | | | | | |
| 6 | | | | | | | | | |
| 7A | | | | | | | | | |
| 7B | | | | | | | | | |
| 8 | | | | | | | | | |
| 9 | | | | | | | | | |
| **Total** | | | | | | | | | |
| **Sig (HoG)** | | | | | | | | | |

© Mauritius Examinations Syndicate

Marks

**Question 1 A (5 marks)**

**ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுது.**



புட்டி ______________________



______________________



______________________



______________________



______________________



______________________

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |



Please turn over this page

Marks

**Question 1 B (5 marks)**

**கீழ்க்காணும் தொடர்களைச் சரியான படத்தோடு இணை.**

அஞ்சல்காரர் தேவனுக்கு ஒரு கடிதத்தைக் கொடுக்கிறார்.

காவற்காரர் திருடனைப் பிடித்தார்.

எங்களுக்குக் கடற்கரைக்குப் போகப் பிடிக்கும்.

விமானம் வானத்தில் பறக்கிறது.

பூனை மகிழ்ச்சியோடு விளையாடுகிறது.

நாள்தோறும் என் தம்பி பள்ளிக்குப் போகிறான்.













| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

**Question 2 A (10 marks)**

**கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

(எ - டு)

.....................ப் பக்கத்தில் ஓர் ஆறு இருக்கிறது.

அ. திடல் இ. திடலிலிருந்து

(ஆ.) திடலுக்கு ஈ. திடலில்

---

க. நேற்று செல்வி கோலாட்டம் .......................... .

அ. ஆடுகிறாள் இ. ஆடுவாள்

ஆ. ஆடினாள் ஈ. ஆடும்

உ. கூட்டில் ..................... பறவைக் குஞ்சுகள் இருக்கின்றன?

அ. எவ்வளவு இ. எத்தனை

ஆ. எப்படி ஈ. எங்கே

ங. சிறுமி கீழே விழுந்தாள். அதனால், ...................... அழுகிறாள்.

அ. அவள் இ. அவன்

ஆ. நான் ஈ. அது

ச. தாத்தா .....................ப் பழம் கொடுக்கிறார்.

அ. தம்பியின் இ. தம்பியோடு

ஆ. தம்பியை ஈ. தம்பிக்கு



Please turn over this page

Marks

ரு. இந்தக் கயிறு .......................... .

அ. நீளம் இ. நீளமானது

ஆ. நீளமாய் ஈ. நீளமான

சு. தோட்டத்தில் ஓர் அழகான ........................... இருக்கிறது.

அ. குளத்தின் இ. குளத்துக்கு

ஆ. குளங்கள் ஈ. குளம்

எ. கந்தன் வழிபாடு ......................... பள்ளிக்குப் போகிறான்.

அ. செய் இ. செய்கிறான்

ஆ. செய்து ஈ. செய்த

அ. அப்பாவுக்குப் பல்வலி. ........................... அவர் மருத்துவமனைக்குச் சென்றார்.

அ. அதனால் இ. ஏனென்றால்

ஆ. ஆனால் ஈ. ஆனாலும்

கூ. அம்மா தேநீரில் பாலும் ........................... சேர்க்கிறார்.

அ. சர்க்கரை இ. சர்க்கரையில்

ஆ. சர்க்கரையும் ஈ. சர்க்கரையின்

க0. அடுத்த வாரம் எனக்கு ஓர் அழகான பரிசு ......................... .

அ. கிடைக்கிறது இ. கிடைத்தன

ஆ. கிடைத்தது ஈ. கிடைக்கும்

M

R

HG

QC

CE

Marks

**Question 2 B (5 marks)**

**கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. எனக்கு மிகவும் ...................... இருக்கிறது. தயவு செய்து எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுக்கலாமா?

அ. பசியாய் | இ. கோபமாய்
ஆ. தாகமாய் | ஈ. மகிழ்ச்சியாய்

உ. தேவகி தன் நூலை எங்கும் ...................... . ஆனால் அதைப் பார்க்கவில்லை.

அ. எழுதினாள் | இ. தேடினாள்
ஆ. வாங்கினாள் | ஈ. கழுவினாள்

ங. இன்றைக்கு ...................... அதிகமாக இருக்கிறது. எனக்குச் சூடான தேநீர் வேண்டும்.

அ. குளிர் | இ. வெயில்
ஆ. இருள் | ஈ அழகான

ச. இன்று ...................... இல்லை. மாணவர்கள் எல்லாரும் வீட்டில் தங்குகிறார்கள்.

அ. கடை | இ. வங்கி
ஆ. பள்ளி | ஈ. சந்தை

ரு. என் அப்பாவுடைய ....................... உடைந்தது. அதனால் அவர் பேருந்தில் வேலைக்குப் போகிறார்.

அ. விமானம் | இ. கப்பல்
ஆ. உந்து வண்டி | ஈ. இரயில் வண்டி

| M |
|---|
| R |
| HG |
| QC |
| CE |



Please turn over this page

**Question 3 (10 marks)**

Marks

**கீழ்க்காணும் விளம்பரத்தைக் கவனமாகப் படி.**

**பாரதிதாசன் அரசாங்கப் பள்ளி**

***உலக நீர் தினம்***

உலக நீர் தினத்தை ஒட்டிப் பாரதிதாசன் அரசாங்கப் பள்ளி சில நடவடிக்கைகளை நடத்துகிறது.

**தேதி** : ௨0௨௩ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், ௨௨ஆம் தேதி

**நேரம்** : ஒன்பது மணி முதல் பன்னிரண்டு மணி வரை

**பின்வரும் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள, ஆறாம் தர மாணவர்களை அழைக்கிறோம்.**

- பள்ளிக்குப் பக்கத்தில் உள்ள ஆற்றைச் சுத்தம் செய்தல்
- 'நீர்' என்னும் தலைப்பை ஒட்டிக் கட்டுரை எழுதுதல்

நீர் மிகவும் முக்கியமானது.

- குடிக்கவும்
- செடிகளைப் பாய்ச்சவும் நீர் எங்களுக்குத் தேவை.

மேலே குறித்த நடவடிக்கைகளில் நீங்கள் கலந்து கொள்ள விரும்பினால், தலைமை ஆசிரியை திருமதி வாணியிடம் உங்கள் பெயரைக் கொடுக்க வேண்டும்.

மார்ச்சு மாதம், ௨0ஆம் தேதிக்குள் உங்கள் பெயரைக் கொடுக்க வேண்டும்.

உங்கள் பெற்றோரிடம் அனுமதி கேட்க வேண்டும்.

தொலைபேசி எண் : ௪௨௯௭௫௩௪



Marks

**கீழ்க்காணும் ஒவ்வொரு வினாவுக்கும் விடை எழுது.**

க. எந்தப் பள்ளி இந்த விளம்பரத்தைத் தயாரித்தது?

................................................................................ [1]

உ. எந்தத் தினத்தை ஒட்டி இந்த விளம்பரம் தயாரிக்கப்பட்டது?

................................................................................ [1]

ந. நடவடிக்கைகள் எந்தத் தேதியில் நடைபெறும்?

................................................................................ [1]

ச. எந்தத் தர மாணவர்கள் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளலாம்?

................................................................................ [1]

ரு. எந்த இரு நடவடிக்கைகளில் மாணவர்கள் பங்கு கொள்ளலாம்?

(i) ................................................................................

(ii) ................................................................................ [2]

சா. நீர் ஏன் முக்கியமானது? ஒரு காரணத்தை எழுது.

................................................................................ [1]

எ. தலைமை ஆசிரியை பெயர் என்ன?

................................................................................ [1]

அ. நீங்கள் கலந்து கொள்ள விரும்பினால், யாரிடம் அனுமதி கேட்க வேண்டும்?

................................................................................ [1]

கூ. பள்ளியின் தொலைபேசி எண் என்ன?

................................................................................ [1]

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

**Question 4 (15 marks)**

**தந்துள்ள பகுதியைக் கவனமாகப் படி.**

நிலாவும் அருளனும் நல்ல நண்பர்கள். அவர்கள் வகுப்பறையில் சேர்ந்து உட்காருவார்கள். மாலைதோறும் அவர்கள் சேர்ந்து வீட்டுக்குத் திரும்புவார்கள். நண்பர்களுக்கு நிலா மிகவும் பிடிக்கும். ஏனென்றால் அவள் மிகவும் நல்ல சிறுமி.

ஒரு நாள் நிலா மெதுவாக வகுப்புக்குள் நுழைந்தாள். அவள் சிரிக்கவில்லை.

"யார் உன்னிடம் கத்தினார்?" என்று அருளன் கேட்டான். நிலா பதில் அளிக்கவில்லை. அவள் உட்கார்ந்து கொண்டே கீழே பார்த்தாள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு ஆசிரியர் நிலாவுடைய பெயரை அழைத்தார். நிலா மீண்டும் பதில் அளிக்கவில்லை. ஆசிரியர் மறுபடியும் அவளுடைய பெயரை உரக்கக் கூப்பிட்டார். நிலா தன் கையைத் தூக்கினாள்.

"நீ ஏன் பேசாமல் இருக்கிறாய்?" என்று ஆசிரியர் அவளிடம் கேட்டார். நிலா அமைதியாக இருந்தாள். அவள் வியாதியாய் இருந்தாள் என்று ஆசிரியர் நினைத்தார்.

"நீ நலமா? மருத்துவரைக் கூப்பிடலாமா?" என்று ஆசிரியர் அவளிடம் கேட்டார். நிலா 'இல்லை' என்று தன் தலையை ஆட்டினாள்.

"நிலா, உனக்கு என்ன ஆகிவிட்டது?" என்று அருளன் கேட்டான். நிலாவுடைய நண்பர்கள் அனைவரும் அவளிடம் வினாக்களைக் கேட்கத் தொடங்கினார்கள்.

" உன் தம்பி நலமா?" என்று வள்ளி கேட்டாள்.

“உன் நாய்க்குட்டி நலமா?” என்று குழலி கேட்டாள்.

“உன் பாட்டி நலமா?” என்று அன்பழகன் கேட்டான்.

நிலா ஒவ்வொரு முறையும் ‘ஆம்’ என்று தன் தலையை ஆட்டினாள். ஆனாலும், அவள் தன் தலையைத் தூக்கவில்லை.

திடீரென்று அருளனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அவன் நிலாவைச் சிரிக்க வைக்க விரும்பினான். அவன் தன் பையிலிருந்து ஒரு பொருளை எடுத்து நிலாவின்மீது வீசினான். அது ஒரு பெரிய எலி பொம்மை! முதலில் நிலாவுக்குப் பயம் ஏற்பட்டது. ஆனால், அது ஒரு பொம்மை என்று பார்த்தபோது சிரிக்கத் தொடங்கினாள்.

அப்போது அவள் ஏன் நாள் முழுதும் பேசவில்லை என்று அருளனும் தன் நண்பர்களும் புரிந்து கொண்டார்கள். அவளுடைய வாயில் நான்கு பற்கள் இருக்கவில்லை!

(**தலையை ஆட்டினாள்*** **:** Shook her head)

**Question 4 A (5 marks)**

**அ. ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் சரியானது. அச்சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. நாள்தோறும் நிலா........................ வீட்டுக்குத் திரும்புவாள்.

அ. வள்ளியோடு

ஆ. அருளனோடு

இ. குழலியோடு

ஈ. அன்பழகனோடு

Marks

உ. எல்லாருக்கும் நிலா பிடிக்கும். ஏனென்றால் ...................... .

அ. அவளுக்கு ஒரு நாய்க்குட்டி இருந்தது

ஆ. அவள் மெதுவாக நடந்தாள்

இ. அவள் ஒரு நல்ல சிறுமி

ஈ. அவள் அமைதியாக இருந்தாள்

ஊ. நிலா பதில் அளிக்கவில்லை என்று பார்த்து, ஆசிரியர் ............................ .

அ. அவளிடம் கத்தினார்

ஆ. அவளுடைய பெயரை உரக்கக் கூப்பிட்டார்

இ. ஒரு மருத்துவரை அழைத்தார்

ஈ. சிரிக்கத் தொடங்கினார்

எ. ஆசிரியர் அவளுடைய பெயரை இரண்டாம் முறையைக் கூப்பிட்டபோது, நிலா........................ .

அ. தன் கையைத் தூக்கினாள்

ஆ. அருளனிடம் சிரித்தாள்

இ. கீழே பார்த்தாள்

ஈ. வீட்டுக்குத் திரும்பினாள்

ஏ. நிலா தன் தலையைத் தூக்கவில்லை. ஏனென்றால் .......................... .

அ. அவள் வியாதியாய் இருந்தாள்

ஆ. அவள் பேச விரும்பவில்லை

இ. அவளுக்கு ஒரே கோபம்

ஈ. அவள் சிரித்துக் கொண்டிருந்தாள்

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

## Question 4 B (10 marks)

**ஆ. கீழ்க்காணும் ஒவ்வொரு வினாவுக்கும் விடை எழுது.**

க. வகுப்பறையில் நிலா யாருக்குப் பக்கத்தில் உட்காருவாள்?

........................................................................ [1]

உ. நிலா அமைதியாக இருந்தபோது, ஆசிரியர் என்ன நினைத்தார்?

........................................................................

........................................................................ [1]

ங. யார் நிலாவிடம்

(அ) தன் தம்பியைப் பற்றிக் கேட்டாள்?

........................................................................ [1]

(ஆ) தன் நாய்க்குட்டியைப் பற்றிக் கேட்டாள்?

........................................................................ [1]

(இ) தன் பாட்டியைப் பற்றிக் கேட்டான்?

........................................................................ [1]

ச. அருளன் எவ்வாறு நிலாவைச் சிரிக்க வைத்தான்?

........................................................................

........................................................................ [1]

ரு. நிலா ஏன் நாள் முழுதும் பேசவில்லை?

........................................................................

........................................................................ [1]

Please turn over this page

Marks

ஈ. **கதையின் அடிப்படையில் கீழ்க்காணும் நிகழ்ச்சிகளை ஒழுங்காக எழுது. பொருத்தமான எண்ணைக் கட்டத்தில் எழுது. ஓர் எடுத்துக்காட்டு கொடுக்கப்பட்டது.** [3]

அ. நிலா சிரிக்கத் தொடங்கினாள். [ ]

ஆ. அருளன் பையிலிருந்து ஒரு பொம்மையை எடுத்தான். [ ]

இ. நிலா வகுப்புக்கு வந்தாள். [ 1 ]

ஈ. ஆசிரியர் நிலாவுடைய பெயரைக் கூப்பிட்டார். [ ]

| M | R | HG | QC | CE |
|---|---|---|---|---|
| | | | | |

**Question 5 A (4 marks)**

**(அ) கீழ்க்காணும் சொற்றொடர்களில் உள்ள சொற்களை ஒழுங்காக எழுது.**

க. மணிக்கு திரும்பினான் செல்வன் ஐந்து வீட்டுக்குத்

.............................................................................................................

.............................................................................................................

உ. சுவையான சமைக்கிறாய் சமையல் உணவைச் நீ அறையில்

.............................................................................................................

.............................................................................................................

| M | R | HG | QC | CE |
|---|---|---|---|---|
| | | | | |

**Question 5 B (6 marks)**

**(ஆ) கீழ்க்காணும் தொடர்களை முடிக்க.**

க. வள்ளி நூல் நிலையத்துக்குச் சென்று, ..............................................

.............................................................................................................

உ. பள்ளி முதல் நாளில் ...............................................................................

.............................................................................................................

ங. சிறிது நேரத்தில் மழை பெய்யும். அதனால்

.............................................................................................................

.............................................................................................................

| M | R | HG | QC | CE |
|---|---|---|---|---|
| | | | | |

Marks

**Question 6 (10 marks)**

**கீழ்வரும் கட்டத்தில் பத்துச் சொற்கள் தரப்பட்டுள்ளன. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பகுதியில் உள்ள கோடிட்ட இடத்தில் எழுது. ஒவ்வொரு சொல்லையும் ஒரு முறை மட்டும் பயன்படுத்த வேண்டும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| **கீழே** | **கடுமையான** | **பார்க்க** | **விழும்** | **பயம்** |
| **தனியாக** | **இடம்** | **வேண்டாம்** | **குதித்தது** | **முடியாது** |

ஒரு நாள் ஒரு குருவி தனது அப்பாவிடம், "எனக்குப் பறக்க ஆசை இல்லை. எனக்கு ஒரே ..................," என்று சொன்னது. "நீ பறக்க முயற்சி செய். கூடிய விரைவில் கூட்டில்* .................. இருக்காது," என்று தனது தந்தை கூறியது. குருவி மரத்திலிருந்து .................. பார்த்தது.



*கூடு

"மரம் மிகவும் உயரமாக இருக்கிறதே! என்னால் பறக்க ..................," என்று நினைத்தது. மேலும், .................. காற்று வீசியது. அது கீழே .................. என்று நினைத்தது.

சிறிது நேரத்துக்குப் பிறகு, "கீழே ..................க் கூடாது. மேலும், பயப்பட ..................," என்று அம்மா குருவியிடம் கூறியது. குருவி ..................ப் பறக்க வேண்டும் என்று தனது பெற்றோர் கூறின. அப்போது குருவி கூட்டிலிருந்து .................. . இறுதியில் அது பறக்கக் கற்றுக் கொண்டது.

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |



Please turn over this page

Marks

**Question 7 A (5 marks)**

**(அ) அடிக்கோடுள்ள சொற்களில் பிழைகள் உள்ளன. அவற்றைத் திருத்திக் கோடுள்ள இடத்தில் எழுது.**

க. அக்கா எனக்குப் **பட்டு** ......................... ரூபாய் கொடுத்தார்.

உ. நேற்று தம்பி தோட்டத்தில் **விளையாடினாள்** ....................... .

ங. பையில் ஏழு **நூல்** ........................ இருக்கின்றன.

ச. பாத்திரத்தில் **எத்தனை** ........................ சர்க்கரை இருக்கிறது?

ரு. **பேருண்டு** ........................ வண்டியில் மக்கள் பலர் இருந்தார்கள்.

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

**Question 7 B (5 marks)**

**(ஆ) வளைக்கோட்டில் உள்ள சொல்லைத் திருத்திக் கோடுள்ள இடத்தில் எழுது.**

க. குமரன் ..................... கொடியை ஏற்றினான். **(நாடு)**

உ. வகுப்பில் மாணவர்கள் ..................... பேசுகிறார்கள். **(சத்தம்)**

ங. பூனை பாலைக் ..................... வெளியே ஓடியது . **(குடி)**

ச. அம்மா ..................... தண்ணீர் ஊற்றுகிறார். **(குவளை)**

ரு. அரசி ..................... வீட்டுப்பயிற்சி கடினமானது. **(செய்)**

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

**Question 8 (10 marks)**

**கீழ்க்காணும் ஒவ்வொரு படத்துக்கும் சொற்கள் தரப்பட்டுள்ளன. ஒரு கதையை அமைக்க, அச்சொற்களைக் கொண்டு சொற்றொடர் அமைத்து எழுது.**



ஒரு நாள் – கடற்கரை

......................................................................

......................................................................



அடையும்போது – உணவு

......................................................................

......................................................................



திடீரென்று – மழை

......................................................................

......................................................................



விரைவாக – தங்கள் பொருட்கள்

......................................................................

......................................................................



கடைசியில் – வீடு

......................................................................

......................................................................

| M |
|---|
| R |
| HG |
| QC |
| CE |

Marks

**Question 9 (10 marks)**

**தந்துள்ள குறிப்புகளைக் கொண்டு 10 வரிகள் அளவில் ஒரு கதை எழுது.**

- நீ உன் குடும்பத்தோடு சந்தைக்குப் போதல்
- காய்கறிகளை வாங்குதல்
- திடீரென்று ஒருவன் உதவி கேட்டல் (ஏன்?)
- நீயும் உன் குடும்பத்தாரும் என்ன செய்தீர்கள்?
- கடைசியில் என்ன நடந்தது?

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

M

R

HG

QC

CE

Marks

**BLANK PAGE**